1995 ஏப்ரல் 17]

பொருளாதார வளர்ச்சிக்கு பல துறைகளிலும் மேம்பாடு செய்திருக்கின்ற இந்த நல்ல நிலையில், பூ விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையிலே காலையிலே பூக்களை எடுத்துச் செல்வதற்குரிய வாகனங்களை வாங்குவதற்கு விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் கடன் தொகையாவது வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. காலை நேரங்களிலே அங்காடிக்கு பூ உற்பத்தியாளர்கள் கொண்டுபோய் விற்பனை செய்கின்றபோது அதிக வியாபாரிகள் வருகின்றார்கள். அங்கே கொள்முதல் செய்யப்பட்ட பூக்களை அவர்கள் விரைந்து விற்பனை செய்யக்கூடிய இடங்களுக்கு எடுத்துச்செல்லவேண்டும். ஏனென்று சொன்னால் பூ என்பது அழுகும் பொருள். எனவேதான் காலை நேரங்களில் விலை அதிகம் கிடைக்கிறது. இரண்டு மணிநேரம் கழித்தால் விலை குறைகிறது. இதுபோன்ற காலதாமதம் ஏற்படுவது என்பது இந்தத் துறையில் ஒரு வழக்கமாக இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தங்களுடைய தோட்டங்களிலிருந்து அல்லது விளை நிலங்களிலிருந்து பெறக்கூடிய அந்த மலர்களை அதனுடைய தரம் குறையாமல், வாடாமல் கொண்டு வந்து நல்ல, அதிக விலை கிடைக்க கூடிய நகரங்களிலே விற்கவேண்டுமென்பதற்காக வாகன வசதி வேண்டுமென்ற முறையிலே ஆங்காங்கே இருக்கின்ற மலர் உற்பத்தியாளர்கள் அந்தச் சங்கங்களை நிறுவி, அந்தச் சங்கங்களின் மூலமாக ஒரு குளிர்பதன வசதி செய்யப்பட்ட வாகனம் வேண்டுமென்று கோரியதால் அதை வாங்க இருக்கிறோம். அதற்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று முறையாக விண்ணப்பம் செய்தால், அவர்களுக்கு அரசாங்கம் ஒரு இலட்சம் ரூபாய் மானியம் தந்து புதிய குளிர்பதன வசதி செய்யப்பட்ட வாகனம் வாங்குவதற்கு வசதியை உருவாக்கித் தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 310, திருமதி. பி. நிர்மலா, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

310—

திண்டுக்கல்லில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

* **35954**-திருமதி பி. நிர்மலா:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

[1995 ஏப்ரல் 17

திண்டுக்கல்லில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திண்டுக்கல்லில் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர்கள் செயல்திறன் உடைய பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. புதியதாக மேலும் ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் பால் வினியோகத்தில் பெயர் பெற்றது. குறிப்பாக இந்தியா முழுவதிலும் ஒட்டன்சத்திரத்தின் பெயரால் பால் விற்கப்படுகிறது. இந்த நிலையிலே மேலும் ஒரு குளிரூட்டும் நிலையம் ஒட்டன்சத்திரத்தில் ஏற்படுத்தினால் பால் உற்பத்தியாளர்களுக்கு பேருதவியாக இருக்கும். ஆகவே அது அமைக்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒட்டன்சத்திரக்காரர்கள் பாலே தரமாட்டேன் என்கிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 30 ஆயிரம் லிட்டர் செயல் திறனுடைய பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. அதை 50 ஆயிரம் லிட்டர்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிற காரணத்தால் புதியதாக அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செல்லசாமி, ஒரு கேள்விதான். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 30 ஆயிரம் லிட்டர் திறனில் அந்த குளிரூட்டும் நிலையம் அங்கே செயல்பட்டு வருகிறது. இருந்தாலும் கூட அங்கே ஒரு பழமையான முறை கடைபிடித்து வரப்படுவதால் சரியான செயல்பாடுகள் அங்கு இல்லை என்று பொது மக்கள் கருதுகிறார்கள். எனவே அங்கே பலநேரம் பால் கெட்டு விடுவதாக கூட பல சொசைட்டிகளிலேயிருந்து வருகிற புகார்கள் சொல்லுகின்றன. எனவே அதன் அடிப்படையில், அதனை விரிவாக்கம்

1995 ஏப்ரல் 17]

செய்கின்ற பொழுது, அதனை லேட்டஸ்ட் டெக்னாலஜி என்று சொல்லுவார்களே அதன் அடிப்படையில் புதிய தொழில் நுட்ப யுக்திகளை கையாண்டு அந்த முறைகளை புகுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவருடைய கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 311. திரு.ஆர். சிங்காரம். மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

311—

கைத்தறித் துறைக்கு வங்கி அமைத்தல்

* **14609**—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கைத்தறித் துறைக்கு தனி வங்கி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கைத்தறித் துறைக்கு தனி வங்கி அமைக்கப்படும் செயற்குறிப்பு குறித்து அரசு பரிசீலித்து வருவது குறித்து நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். அதேநேரத்தில் அதனுடைய கஷ்டங்கள் என்ன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், இந்த அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் புரிந்திருக்கிற காரணத்தால் அதைப் பரிசீலிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் கிடைப்பதிலே பல்வேறு வகையான கஷ்டங்கள் இருக்கின்றன. பொதுவாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எந்த